உ

சிவமயம்



திரியாயைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் பதியை
தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட

# அமரர். உயர்திரு பொன்னையா சுந்தரலிங்கம்

(கிராம சேவை உத்தியோகத்தர்)

அவர்கள் சிவபத மெய்திய

# 31ம் நாள் நினைவு மலர்

21.02.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளிற்கு இன்நூல்

# சமர்ப்பணம்!

எமது குடும்பத்தின் தீப ஜோதியாய் விளங்கி
எம்மை அன்புடன் பேணி வளர்த்து
நல்வழிகாட்டி அறிவு ஒளியூட்டி எம்மை
நன்நிலையில் வைத்து விட்டு அமரத்துவம்
அடைந்த எம் அன்புத்தெய்வத்தின்
பொற்பாதங்களில் காணிக்கையாக
இன் நினைவு மலரினைச் சமர்பித்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரர்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில்
19
-
09
-
1956

விண்ணில்
22
-
01
-
2015



அமரர்.

# உயர்திரு.பொன்னையா - சுந்தரலிங்கம்

## திதி நிர்ணய வெண்பா

'ஆண்டு ஜய நாம மானதோர் தையேழில்
பூண்ட திதி பூர்வபக்ச துதியையதில் - பெருமையுது
பொன்னையா - சுந்தரலிங்கம் சேவையாளன்
பன்னகன் தாள் சென்றானறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக மெய்திய

# அமரர் பொ.சுந்தரலிங்கம்

அவர்களின்

## வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

ஈழ நாட்டின் கீழ்த்திசையில் "குடிதனை நெருக்கி பெருக்கமாய் தோன்றும் கோணமாமலையின் வடக்காக சுமார் முப்பது மைல்கல் தொலைவில் நானிலங்களும் அமையப் பெற்ற வளம் கொழிக்கும் கிராமம் திரியாய் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தொழிலாக விவசாயம் செய்யப்படுகின்றது. நெற்களனிகள் சூழவுள்ளதால் மருத நிலத்துக்கே பெயர் பெற்றது.

கோணேசப் பெருமானுக்கு தாமரைத்தண்டின் நூலில் செய்த திரியும் பசுநெய்யும் கொண்டு விளக்கேற்றி வழிபட்ட காரணத்தால் "திரியாய்" என்னும் காரணப் பெயர் பெற்றது.

திரியாய் பதியின் உயர்மரபில் உதித்த உத்தமர் ஏரம்பு-பொன்னையா நித்திலங்கொழிக்கும் நிலா வெளியூரின் நினைவான மயில்வாகனம் மகள் கனகம்மா என்னும் காரிகையினை திருமணம் செய்து இல்லறவாழ்வை இயற்றிய காலை, புவனேஸ்வரி, மகாலிங்கம், பிருந்தாமணி, ஆனந்தராசா சுந்தரலிங்கம், செல்வநாச்சியார், பவானி, குணலிங்கம், உருத்திரநாதன் தயானந்தி என்னும் பதின்மரைப் பெற்றனர்.

இவர்களுள் ஐந்தாவது மகனாக சுந்தரலிங்கம் அவர்கள் ஆயிரத்து தொழாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு ஒன்பதாம் மாதம் 19ம் திகதி பிறந்தார். இளமைத்துடிப்பும் இயல்பான விவேகமு முடைய சுந்தரலிங்கம் பள்ளிப்பருவமடைந்து கல்வி கற்க திரியாய் மகாவித்தியாலயம் சென்றார் விளையும் பயிரை முளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும் என்பதற்கேற்ப கல்வித்துறையில் முதல் மாணவராக ஆண்டு தோறும் தகுதி பெற்று வந்ததுடன் விளையாட்டுத் துறையிலும் அதியுன்னத நிலையை அடைந்தார்.

கல்வித்துறையில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரத்தில் திறமைச்சித்தி பெற்று வவுனியா விவசாயப்பாடசாலைக்கு சென்று பயிற்சி பெற்று விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்று பயிற்சி செய்கை உத்தியோகத்தர் (C.O)என்னும் உத்தியோகத்தை பெற்றார்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த சுந்தரலிங்கம் அவர்களுக்கு இப்பதவி மூலம் சிறந்த விவசாய அனுகூலங்களுக்கு ஏற்புடையதானது விவசாயத்தோடு உத்தியோகத்தையும் பார்த்து கிராம மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றிவந்தார்.

விதியின் விளையாக சுந்தரலிங்கம் அவர்கள் தனது தந்தையார் பொன்னையா அவர்களை இழந்து குடும்ப பொறுப்புக்களை தனது சகோதரர்களுடன் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் பயிற்செய்கை உத்தியோகத்தர்கள் அரசினால் பதவிமாற்றம் செய்யப்பட்டு கிராம சேவையாளர்களாக உள்வாங்கப் பட்டவேளை சுந்தரலிங்கம் அவர்கள் கிராமசேவை உத்தியோகத்தர் பதவியை பெற்றார்.

திரியாய் கிராம சேவை உத்தியோகத்தராக கடடையாற்றிய சுந்தரலிங்கம் பொதுப்பணிகளிலும் மிகுந்த அக்கறையோடு பங்களிப்புச் செய்தார் திரியாய் முத்துமாரியம்மன் ஆலய நிருவாக சபையிலும், வரத விக்னேஸ்வரா ஆலய நிருவாக சபையிலும் காத்திரமான பங்களிப்பைச் செய்து பின்னர் பொருளாளராகவும், செயலாளராகவும் சிலகாலம் சேவை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரலிங்கம் அவர்கள் 1984ல் திருமண வயதடைந்த வேளை அவரது உறவு வழிவந்த வேலுப்பிள்ளை இரத்தினம் தெய்வானை தம்பதியரின் தலைமகள் யசோதை என்னும் நாற்குணமும் பொருந்திய நங்கை நல்லாளை திருமணம் செய்து வைக்க விதியது கைகூடி இரு சார்பு பெற்றோர்களும் ஒன்று கூடி நிட்சயதார்த்தம் செய்து சுற்றம் சூழ உற்றார் உவகையுற ஊரார் ஒருங்கிணைந்து திருமண விழா வெகு விமரிசையாக நிகழ்ந்தது .

இவர்களின் இல்லறவாழ்வில் மதுரா, கிஷாந்தி, சாரங்கா என்னும் மூன்று முத்துக்கள் வாழ்வை அலங்கரித்தன. புகுந்த வீட்டில் தகுந்த மைத்துனர்கள், மைத்துனிகள் மாமன், மாமி எல்லாராலும் தலைவனாக சுந்தரலிங்கம் மதிக்கப்பட்டார்.

தனது குடும்பத்தைப் போலவே மனைவியின் குடும்பமும் நிறைந்த குடும்பம் உலகநாதன் சிதம்பரநாதன், சூரியகுமார், பகிரதாதேவி, சாந்தாகுமாரி, சந்திரகௌரீசன், ரவிச்சந்திரன், கேதீஸ்வரன், சுதர்ஸன் என ஒன்பதின் மாதலைவனை சூழ்ந்து நின்றார்கள்.

நிறைவான வாழ்க்கை வாழ்ந்த வேளை காலத்தின் கட்டளையால் வீடுவாசல் நில புலங்கள் ஊரை விட்டு இடம் பெயர நேரிட்டது.

1990 இல் இடம் பெற்ற வன் செயலைத் தொடர்ந்து முல்லைத்தீவுக்கு சென்ற இவர் மீண்டும் திரியாய் கிராமத்திற்கு திரும்பாமல் முல்லைத்தீவுதனிலே தன் வாழ்நாளை மனைவி மக்களுடன் கழித்தார். இவரது வாழ்வில் இக்காலத்தில் எதிர்பாராத ஒரு பேரிடி அதாவது தனது தொழிலை இழக்க வேண்டிய ஒரு நிர்கதி சுமார் நான்குவருடங்களுக்கு பிற்பாடு மீண்டும் வற்றாப்பளை அம்மனின் அருளால் அவரது தொழில் கிடைக்கப்பெற்றது. அதன்பின் 1994 தொடக்கம் 1998 வரை துணுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துவெட்டுவான் கிராம உத்தியோகத்தராகவும் அதன்பின் 1999 தேராவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடைமையாற்றினார் இக்காலப்பகுதியில் மக்கள் சேவை மகேசன் சேவை என தன்னை அர்ப்பணித்து கடமையாற்றியதால் பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றார். மூத்தமகள் மதுராவுக்கு திருக்கோணமலையைச் சேர்ந்த நடராஜா விக்னேஸ்வரி தம்பதிகளின் மூன்றாவது மகன் சஜிந்தனுக்கும் 2010ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார்.

சாம்பல்தீவைச் சேர்ந்த நடராஜா சகுந்தலாதேவி தம்பதிகளின் கடைசி புத்திரன் அகிலனுக்கு 2012ம் ஆண்டு தம் கனிஸ்ட புத்திரி சாரங்காவை திருமணம் செய்து வைத்து மனமும் மகிழ்ந்தார். 1999தொடக்கம் 2010 வரை சுதந்திரபுரம் பகுதியிலும் 2010 தொடக்கம் 2011 வரை மாவிக்கபுரம் பகுதியிலும் 2011 தொடக்கம் 2015 வரை உடையார் கட்டு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கடமையாற்றி பொதுமக்களின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டு செயற்படும் பட்சத்தில் தனது இரண்டாவது அன்புப் புத்திரியின் இல்லற வாழ்வை ஆரம்பிக்கும் முகமாக திருமாங்கல்யத்தின் பொன் உருக்குக்கு செய்து: இன்புற்றார். மறு நாள் எவரும் எதிர்பாரத நிலையில் இவ் உலகை விட்டு இறைவனடி சரணாகதியடைந்தார் இவரது திடீர் மரணச் செய்தியானது இவரது பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள், நண்பர்கள் மற்றும் இவர் கடமையாற்றிய கிராமத்துமக்கள் என பல்வேறு பிரிவினரையும் சொல்லொன்ணா துயரத்தில் ஆழ்த்தியது.

இவரது பிரிவால் மனைவி, பிள்ளைகள், தாய், சகோதர்கள் மாமி, மைத்துனர் என எல்லோரும் இத்துயரத்தில் இருந்து மீளவிருப்பது எப்போது?

" அன்பே சிவம் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதாபச்செய்திகள்

**தன் கடமையைச் செம்மையாகச் செய்த ஒரு நல்ல உத்தியோகத்தர்**
**திரு.பொ.சுந்தரலிங்கம்**

மறைந்த பொன்னையா சுந்தரலிங்கம் அவர்கள் குச்சவெளிப் பிரிவில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய போது அவரது செயற்திறனை அவதானித்து அவரைத் திரியாய் கிராமசேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு.புஷ்பநாதன் அவர்களுக்கு உதவியாளராக நியமித்திருந்தேன். பின் திரியாய் பிரிவு சனத்தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்டபோது அவர் கட்டுக்குளம் பிரிவுக்குக் கிராம சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். கடமையுணர்வுடனும், அர்ப்பணிப்புடனும் நேர்மையாகவும் தனது பணியை செய்துவந்த ஒரு நல்ல உத்தியோகத்தர் அவர். மிகவும் கஷ்டமான அக்காலத்தில் சோராது செயற்பட்டவர். அவரது பிரிவு மக்களால் நேசிக்கப்பட்டவர்.

அவருடைய சடுதியான இழப்பால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவருடைய ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன்.

T. குலவீரசிங்கம்
முன்னாள் உதவி அரசாங்க அதிபர்,
குச்சவெளிப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளின் நிஜங்களாய்

தீபமொன்று அணைந்தாதன்ன
திங்கள் ஒன்று மறைந்தாதன்ன
உறவு என்று அருகில் இருந்தவன்
உணர்வு வலிக்க உயிர் நீங்கி சென்றதென்ன
உணர்வு வலிக்க உயிர் நீங்கி சென்றதென்ன

பெயர்போலவே அழகான உள்ளம் கொண்டாய்
பெருமைகள் எதுவுமே இன்றி சேவை செய்தாய்
திரிகொண்டு தீபமேற்றிய திரியாயில்
திறமைகள் கொண்டு கல்வியில் சித்திகொண்டாய்

என்னைவிட இளையவன் தான் நீ - இருந்தும்
என்னிலும் அனுபவமும் அகிம்சையும்
அதிகம் கொண்டாய்
கடமையை கடமையாய் செய்யாது
கடமையை உரிமையாய் செய்தவன் நீ

முல்லைத்தீவு மண்தனிலே முழுமையாய்
உழைந்த உன் நினைவுகள் மறையுமா?
கரங்கள் இருந்தால் இருக்க வேண்டும்
உன்னைப்போல் உதவும் கரங்களாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்கு தேர்கொடுத்தான் பாரி
நட்புக்கு உயிர்கொடுத்தான் கர்ணன்
உதவி என்று கேட்போருக்கு சேவை கொடுத்தான்
பொன்னையா சுந்தரலிங்கம் என்று வரலாறு கூறட்டும்

உன் மரணவீட்டில் இதயம் வலிந்து
இமைகள் நனைந்த அத்தனை ஜீவனிலும்
நினைவுகளின் நிஜங்களாய் நீ இருப்பாய்!

**உன் நினைவில் என்றும்**
**குமாரசேகரன் புஸ்பநாதன்**
**ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்**
**திரியாய்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை உணர்வுள்ள சிந்தனையாளர்

அமரரான பொன்னையா சுந்தரலிங்கத்தை 03.04.1978ல் இருந்து எனக்குத் தெரியும். இவர் மிகவும் பண்பான ஒருவர். தனிப்பட்ட ரீதியாகவும் சரி பொதுமக்களுடன் பழகுவதற்கும் மிகவும் நல்ல மனிதன்.

இவர் பொது நல சேவையில் ஆர்வமுள்ளவர். எந் நேரமும் சிரித்த முகத்துடன் பொதுமக்களை வரவேற்பவர். மிகவும் கடமை உணர்வும் நல்ல சிந்தனையாளனுமாவர். இவரது இழப்பு குடும்பத்தினருக்கு பொதுமக்களிற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.



துயரில் ஆழ்ந்த
தம்பையா - பரஞ்சோதி
ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்
தென்னமரவாடி
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம சேவை நிர்வாகத்தின் ஜாம்பவான்
## அமரர்.திரு.பொ.சுந்தரலிங்கம்

ஒரு பிரதேசத்திற்கு கிராம சேவகரின் பணி மிக முக்கியமானதாக அமைகிறது. அவர் அப்பணியை செவ்வனே செய்வதால் அப்பிரதேசம் சிறப்புப் பெறுகிறது. அந்தவகையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு பெருமை சேர்க்க உழைத்த கிராம உத்தியோகத்தர் வரிசையில் முதலிடத்தில் வைத்து எண்ணப்படுபவர் அமரர் திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்கள். எப்பணியைப் பொறுப்பாக வழங்கினாலும் சிரித்த முகத்துடன் அப்பணியை முன்னின்று செய்து முடிக்கும் வல்லமையும், மக்களோடு சகஜமாகப் பழகி அவர்களைக் கவரும் திறனும் வாய்க்கப்பெற்றவர். இவர் அலுவலகப் பணிகளில் ஒரு தூய்மையைப் பேணி அனைத்தையும் ஆவண முறையில் பாதுகாக்கும் இவரது நுட்பம் ஏனைய கிராம உத்தியோகத்தர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

2014 ஆம் ஆண்டின் கிராம சேவகர்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று தன் பணிச்சிறப்பை நிரூபித்தவர். ஆன்மீகப் பணிகளிலும் முன்நின்று உழைத்த பெருந்தகை என்றே கூறலாம். தனது பகுதிக்குட்பட்ட ஆலயங்களை அபிவிருத்தி செய்வதற்கான சகல வழிமுறைகளையும் செயற்படுத்தி அவ்வாலய அபிவிருத்திப் பணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்று அமுல்படுத்தியவர். இது மட்டுமன்றி சமூக சேவைப் பணிகளிலும் தன்னால் இயன்றளவு ஈடுபட்டு உழைத்தவர்.

பிரதேசத்தின் ஆரம்பகால குடியேற்றத்திட்டங்கள் காணிப்பயன்பாடுகள் தொடர்பாக முழுமையான தகவல்களையும் வழங்கி அவர்களின் பணிகளுக்கு தன்னாலான சகல உதவிகளையும் செய்து வழிகாட்டியாக விளங்கிய ஒருவர் என்றால் மிகையாகாது.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் அவரது சேவை முழுமையாக புதுக்குடியிருப்பு பிரதேசத்திலேயே அமைந்திருந்தது. பிரதேசத்தின் பல கிராமங்களிலும் பணியாற்றிய அனுபவம் மிக்க ஒருவர். கிராம சேவகப் பணிக்கு முன் உதாரணமாக இருந்த ஒருவரை இழந்தமை ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவே எமது செயலகத்திற்கு அமைந்துவிட்டது. எனலாம். எனினும் அன்னாரின் ஆத்மாசாந்திக்காக பிராத்திப்போமாக.

இ.பிரதாபன்,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
புதுக்குடியிருப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

**என் அன்புத்துணைவருக்கும்**

**எங்கள் ஆருயிர்த்தந்தையுமான**

**அமரர்.சுந்தரலிங்கம் பேசுகிறார்**

இனியவளே, எந்தன் இல்லத்தின் விளக்கொளியே
மறக்கவொண்ணா இன்ப மெல்லாம் மனத்திடையே உள்ளதடி
உன்னோடு என்பாசம், என்னோடு உன்பாசம்
அன்புத்தளையினால் அடர்த்தியாய்க்கட்டிவைத்தேன்.
கட்டிவைத்தகயிறு சேர்ந்திருந்த தேன்கூடு
மரணத்தின் வாள் வீச்சால் மண்ணாகிப் போனதடி
நமது மக்கள் மூவருண்டு அவரின் இணை மூவருண்டு
கொஞ்சும் மழலையிலே பேரனுமுண்டு
அன்புமக்கள், மருமக்கள் அம்மா உம் கைகளிலே
பரிதவிக்க, வெம்பியழ பார்த்திருக்க வேண்டாமே
வீட்டோடு ஒன்றி இணைந்தவரை காத்திருங்கள்
தெய்வத்தை எந்நாளும் நெஞ்சில் நினைத்து வைப்பீர்
இத்தனையும் இறைவனுடன் ஒன்றிணைந்து பேசுதற்கு
சென்று கொண்டேயிருக்கிறேன். திரும்பி வர முடியாதே

மானசீகமாக

திரு.பொ.சுந்தரலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சத்தியமாய்..........**

அன்பெனும் மந்திரத்தால் பாசக் கயிற்றின்
இறுக்கத்தால் மக்களின் மகிழ்வில் மூழ்கி.
இருந்தேனே சுகமான சொர்க்க வாழ்வில்
இல்லறத்தாளின் மனம்புரிந்து அதுவழி
வாழ்ந்தீரே வாய்த்த மணாளனே மாண்பு மிகு
மானுட வாழ்வின் இரகசியங்களைச் சொல்லி
வாழ துணிவு தந்து நெஞ்சுரம் தந்தவரே
உம் பிரியத்தின் மேல் சத்தியமாய்
கேட்கிறேன் இனி என்று நாம் இணைவோம்
ஒரு முறை சொல்லிட திரும்பியும் வந்திடுவீரே.

- பாசமுள்ள மனைவி -

**எல்லாம் தந்தவரே**

அரவணைப்பில் சுகங்கண்டோம்
கல்வியில் பெருமிதப் பட்டோம்
நற்றுணைகளை தந்ததில் ஆனந்தித்தோம்
வாழ்வு வழிகள் கற்றதில் பயமறந்தோம்
எல்லாம் தந்தவரே அன்பு தந்தையே!

பிரிய மகள்மார்
மதுரா- கிஷாந்தி

**சொல்லாமல்**

தூரதேசம் அனுப்பியெனை மகிழ்ந்து இருந்து
அடிக்கடி தொலைபேசியில் பேசி என்றும்
சுகதுக்கம் விசாரித்து ஆலோசனைகளை தந்து
நெஞ்சுரம் மனவுறுதி எல்லாம் விதைத்தவரே
சொல்லாமல் போனீரோ என்னாசை அப்பாவே

அன்பு மகள்
சாரங்கா (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ.......**

பேச்சினில் அன்பொழுகும் நாளும்
உம்மோடு ஒன்றாய் கூடியிருந்து
வாழ வழி வேண்டி இறைவனை
நித்தமும் பிராத்திப்போமே வந்ததே
சோகம் உம் பிரிவு தந்தையே

- பேறா மக்கள் -

**பகிர்ந்துண்டு**

சேர்ந்திருந்தோம் அன்பாய் பேசி
அளவுகடந்த நட்போடு நாமும்
பகிர்ந்துண்டு சிரித்து ஆனந்தித்து
உங்கள் கவனிப்பில் இருந்தோமே
நடுவில் விட்டு விட்டு எங்கு போனீரோ

- மருமக்கள் -

**கண்ணின் மணியாக**

ஐந்தாவதாய் வந்தவனே இராசனே
எனக்கு முன்னால் நீ போயிடவே
என்ரா உனக்காசை வந்ததுவோ
கண்ணின் மணியாக வளர்த்தெடுத்து
உத்தமி ஒருத்திக்கு துணையாக்கி
பேரபூட்ட சுகத்தை பிள்ளைகளின்
அகத்தில் மகிழ்ந்தேனே ராசாவே
தாங்காது தவிக்கின்றேனே ஐயா

- அன்பு அன்னை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்மறந்து**

கண்ணால் கதை பேசி காதால்
தாலாட்டு கேட்டு காலாட்டி
மெய்மறந்து உம் மேனியினைத்
தழுவி சுகங்கண்டு இருந்தேனே
என்னாசை தாத்தாவே எங்கே நீரோ!

- பேரன் -

**என்னாசை மருமகனே!**

மருமகனாய் பார்த்தேனா பெற்ற
பிள்ளைகளில் ஒன்றாகத்தான் பார்த்தேனே
மாமி மாமி யென்று என்னைச் சுற்றி
வந்துநின்று அன்பு மழைபொழிவீரே
என்னாசை மருமகனே கொழுந்தே.

- மாமி -

**எம் துணையாம்!**

உடன் பிறப்பாய் வந்து எம்மை
மகிழ்வித்தவரே வந்து நின்று
எம் துணையாய் ஆனவரே சகோதரா
மகிமையின் பெருமையில் வாழ்ந்து
போனீரோ எம்மை யெலாம் முந்தி

- சகோதரங்கள் -

**இனியாரெமக்கு**

நீர் வந்தால் நாமும் கொண்டாடி
மகிழ்ந்திருந்து கண்டு மகிழ்ந்து
உம் ஆலோசனை கதைகளை கவனித்து
வாழ்ந்திருந்தீரே பக்கத் துணையாய்
இனியாரெமக்கு துணையாவார் சொல்லுவீரே

- மைத்துன மைத்துனிமார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழ்வாங்கு

ஊருக்கு உழைத்தவரே உத்தமரே
உம்மால் முடிந்த உதவிகள் அத்தனையும்
செய்து தந்து வாழ் வாங்கு வாழ்ந்தீரே
காலனவன் கொடியவன் வந்தான் பாவியேன்
உம்மை திடீரென அழைத்துச் செல்ல

- நண்பர்கள், அயலவர்கள் -

### விண்ணவராய் வாழ

நீர் வந்தால் என்றும் கலகலப்பே
யார் கண்பட்டார் விதியும் விரைந்ததோ
விண்ணவராய் வாழவே மகிழ்ந்து தான்
போனீரோ நிரந்தரமாய் எம்மை பிரிந்திட
நண்பரே உறவே உருகி அழுகின்றோமே

- நண்பர்கள், அலுவலர்கள் -

### இமயத்தைத் தொடுமளவு சேவையால் எங்களி இதயங்களைத் தொட்டவன்.

வாழ்க்கை என்பது
குடும்பத்தை மட்டும் சுமப்பதல்ல
ஊரையும் சேர்த்துச் சுமப்பதுதான் என்று
வாழ்ந்து காட்டிய ஐயாவே
பொன் ஐயா சுந்தரலிங்கனாரே
நீங்கள் சுமந்த ஊர் திரண்டு
உங்களை அஞ்சலிக்கிறது
ஏற்றுக் கொள்ளுங்கள்

மலர்ந்த உங்கள் வதனந்தின்
பொருள் பொதிந்த புன்சிரிப்பும்
உளத்தில் இருந்து எழுந்துவரும்
ஊக்கந்தரும் வார்த்தைகளும்
அர்த்தங்கள் நிறைந்ததான
ஆக்கந்தருஞ் செயற்பாடுகளும்
அச்சச்சோ அற்றுப் போய்விட்டனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றித் திருமகனாய் வலம் வந்தீர்கள்
பத்திரிக்கைகள் எல்லாம்
உங்கள் திறன்களைப்
பிரசுரித்திருந்தனவே
ஆற்றிய பணிக்காய்
உங்கள் அரும்பெருஞ்சேவைத் திறனுக்காய்
போற்றியே உங்களுக்குப் பரிசளித்தாய்
அவை சாற்றி நின்றனவே
நாங்களும்
வாழ்த்தி நின்றோம், வரவேற்று நின்றோம்
இன்று
ஏனோ எங்களைக் கலங்கவிட்டு
தொலைதூரம் போய் விட்டீர்கள்
புனரமைத்த வீதியிலே
புத்தான மின்னொளியிலே
எங்கள் ஊரிலே
உங்களுக்கு
மன மகிழ்வோடு வாழ்த்துப்பா இசைத்து
மங்கள விழா ஒன்றைக்
காண இருந்தோமே

ஓயாத நதியாய் ஓடி
ஊர்ப்பணியே பெரிதென்றுழைத்த
நீங்கள்
ஓய்வு பெற்று
உல்லாச வாழ்வை வாழ்வீர்கள் என்று
ஆசை ஆசையாய்க் காத்திருந்தோமே
இன்று ஏனோ
சந்தனப் பேழையில் வந்து
தாளாத் துயர்தந்து
மீளாத்துயிலில் ஆழ்ந்துள்ளீர்கள்

இமயத்தைத் தொடுமளவான
உங்கள் சேவையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்
இதயங்கள் எல்லாவற்றையும்
தொட்டுச் சென்றுள்ளீர்களே
அந்தச் சேவைகள்
எங்கள் நினைவுகளை விட்டுச்
சொல்லாதிருக்கும் ஐயா

மரணம் என்பது
உங்களையும் ஊரையும்
உடலால் பிரிந்தது.
ஆனால்
உங்கள் மனம் நிறைந்த சேவையோ
உங்களை என்றும் எங்களுடன்
இணைத்துள்ளது.

கனவுகளை
நனவுகள் ஆக்கினீர்கள்
கட்டாந் தரைகளில்
நீர்ச்சுனைகள் ஓடவைத்தீர்கள்
அந்தப் பசுமையில்
எங்கள் பசிகள் தீர்ந்தன
பார்ப்பதற்குத்தான்
நீங்கள் இல்லையே

உங்கள் உந்துருளி ஓடும் வேகம் அது
எங்கள் ஊரை உயர்த்த
நீங்கள் எடுத்த வேகம் அது.
சுழன்றடித்த காற்றாய்
எப்போதும்
சுற்றி வருவீர்கள்
எங்கள் தேவைகளைக் கண்டறிந்து
எங்கெங்கும் அவற்றைக் கேட்டுப்பெற்று
தந்துதவினீர்களே ஐயா
வெள்ளம் உயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் உயர்வது போல
உங்கள்
உள்ளம் உயர்ந்ததால்
நீங்கள் உயர்ந்தீர்கள்

முதுமை நெருங்கிய போதும்
உங்கள் அழகான இளமைத் தோற்றம்
எங்களை ஆச்சரியப்படவைத்தது
நல்லதையே நினைத்ததால்
நல்லதையே செய்ததால்
இளமை உங்களோ டினைந்திருந்தது
பொல்லாத காலமோ
எங்கள்
போதாத காலமோ
அள்ளிச் சென்றுவிட்டான் காலனவன்
வல்லவனே, உங்கள்
வார்த்தைகள் எங்களோடிருக்கும்
வாழும்வரை அவை எங்களை வழிநடத்தும்
போய் வாருங்கள்
புனிதனாக வாழ்ந்தீர்கள்
புகழ்சேர வாழ்ந்தீர்கள்
மனிதனாக வாழ்ந்தீர்கள்
எங்கள்
மனங்களில் நிலைத்தீர்கள்
அழியா உங்கள் நினைவுகளைச் சுமந்து
உங்கள்
ஆத்ம ஈடேற்றத்துக்காய்
இறைவனை இறைஞ்சுகிறோம்
சாந்தி ! சாந்தி ! சாந்தி !

இவ்வண்ணம்
- உடையார்கட்டு வாழ்மக்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்கள் ஓய்வூதியத்தை துரிதமாக பெற தேவையான ஆவணங்கள்

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும்போது ஓய்வூதியச்சம்பளக் கொடுப்பனவைத் துரிதப்படுத்த உத்தியோகத்தரினது சுயவிபரக் கோவையில் இருக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் இல்லாமையே இக்கால தாமதத்திற்கு காரணமாக வுள்ளதென்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சுயவிபரக்கோவையில் இருக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக தமது கவனத்தைச் செலுத்துதல் ஓய்வூதிய நடவடிக்கையை துரிதப்படுத்தும் செயலாகும். எனவே ஒரு சுயவிபரக் கோவையிலும் இருக்க வேண்டிய ஆவணங்கள் தங்களுக்கு அறியத்தரப் படுகின்றன. தாங்கள் சுயவிபரக் கோவையில் கீழ்க் காட்டப்பட்டுள்ள ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

01. நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனக் கடிதம்.

02. நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நிரூபிக்கும் கடிதம் அல்லது உடமை பொறுப்பேற்றல்.

03. தகுதிகாண் நிலைக்காலம் நீடிக்கப்பட்டிருப்பின் அதற்குரிய கடிதங்கள்,

04. மருத்துவ அறிக்கை.

05. சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதம் / பதவியில் உறுதிப்படுத்திய கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சத்தியப்பிரமாணம் / உறுதியுரை.

07. அமைய சேவைக்காலம் இருப்பின் அதற்குரிய கடிதங்கள்.

08. விதவைகள் அநாதைகள் அங்கத்துவ அட்டையின் ஒரு புகைப்படப் பிரதி

09. அரசாங்க சேவை சகாய நிதியில் பங்குகொண்ட கடிதங்கள்.

10. கோவையில் பதவியுயர்வுடன் தொடர்புடைய கடிதங்கள்.

11. சம்பள ஏற்றங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள்.

12. இடமாற்றங்களுக்கு உரிய கடிதங்கள்.

13. வினைத்திறன்காண் தடைகளில் சித்தியடைவதற்குரிய அல்லது அவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டதற்குரிய கடிதங்கள்.

14. ஊழியரின் பிறப்புச் சான்றிதழ்.

15. விவாகச் சான்றிதழ்.

16. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்.

17. வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்கப்பட்ட கடிதங்கள்.

18. விவாகரத்து செய்யப்பட்டிருப்பின் அவ்வழக்குத் தீர்ப்பின் ஒரு பகுதி.

19. மீண்டும் விவாகமாகியிருப்பின் விவாகச்சான்றிதழ்.

20. வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் மரணித்திருப்பின் அவர்களின் மரணச் சான்றிதழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வலது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் வலது குறைவை நிரூபிக்கின்ற மருத்துவச் சான்றிதழ்களும் உரிய மற்ற சான்றிதழ்களும்.

22. வாழ்க்கைத் துணைவர் தொழில்புரிபவராயின் அது பற்றிய விபரங்கள்.

23. தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி அல்லது சாரதி உத்தரவுப் பத்திரம் இருப்பின் அதன் புகைப்படப் பிரதி ஒன்று.

24. கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்.

25. தொழில்சார் தகைமைகள் பெற்றிருப்பின் அச்சான்றிதழ்களின் பிரதிகள்.

26. உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியின்போது பெறப்பட்ட சான்றிதழ்கள்.

27. அரைச்சம்பள விடுமுறைகள் மற்றும் சம்பள மற்ற விடுமுறைகள் பற்றிய விபரங்ளகள்.

28. பிரசவ விடுமுறைகள் பற்றிய விபரங்கள்.

29. திடீர் விபத்துக்கான விடுமுறை பற்றிய விபரங்கள்.

30. வெளிநாட்டு விடுமுறை பற்றிய விபரங்கள்.

31. முற்பட்ட ஆண்டுகளில் விடுமுறைகள் பெற்றிருப்பின் உரிய விபரங்கள்.

32. கற்கை விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் உரிய விபரங்கள்.

33. வருடாந்த விடுமுறை அறிக்கைகள் (பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படாத விடுமுறைகளுக்காக ஓய்வு பெறும் தறுவாயில் கொடுப்பனவுகள் செய்யப்படுவதால்)

34. பதவி வெறி தாக்கல் கட்டளையும் திரும்பச் சேவையில் அமர்த்தும் கட்டளைகளும்.

35. ஒழுக்காற்று கட்டளைகளும் அக்கட்டளை நடை முறைப்படுத்திய கடிதங்களும்.

36. ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்காக சமர்ப்பித்த மேன்முறையீடு பற்றிய தீர்மானங்கள்.

37. இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட கடிதங்கள் (இருக்குமாயின்)

38. இரண்டாம் நிலை அடிப்படையில் இந்தக் காலத்தில் அந் நிறுவனத்தால் ஓய்வுச் சம்பளத்திற்காக சம்பளத்திலிருந்து 25 வீதம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டவை நிரூபிக்கும் கடிதங்கள்.

39. மாகாண சேவைக்கு விடுவித்தல் பற்றிய கடிதங்கள்.

40. மாகாணசேவையிலிருந்த அரசசேவைக்கு உள்ளீர்க்கப் பட்ட கடிதங்கள்.

41. சேவை பாராட்டப்பட்ட கடிதங்களும் குற்றம் குறை தெரிவித்த கடிதங்களும்.

42. கடன்பெறப்பட்டதற்கான கடிதங்கள்.

43. நாளதுவரைபடுத்தி விதிமுறையாக பேணிவருகின்ற வரலாற்றுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. அரச விடுதியில் வசிப்பதாக இருந்தால் வீட்டு வாடகை, மின்சாரம், தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளதற்கான அறிக்கைகள்.

45. பெயர் மாற்றக்கடிதம் (கடமையின்போது திருமணமாகிய பெண் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

46. உடன்படிக்கை படிவம்.

47. சொத்து பிரகடனம்.

48. கணவர் மனைவியின் / பிறப்புச் சான்றிதழ்.

49. உரிய வேறு ஆவணங்கள்.

இந்த ஆவணங்களில் தங்களுக்குப்பொருத்தமான ஆவணங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றைத் தங்களுக்குரிய திணைக்களங்களில் விரைவில் கையளிக்கப்படல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணச்சடங்கு வினா விடைகள் - 60

1. **மரணச்சடங்கு என்பது வேறு எப்பெயர்களில் அழைக்கப்படுகின்றது?**
சாவீட்டுக்கிரியை, செத்தவீட்டுக்கருமம், மரணக்கிரியை, பிரேதக்கிரியை, சவக்கிரியை, உத்திரக்கிரியை, அபரக்கிரியை என அழைக்கப்படுகின்றது.

2. **பொதுவில் அபரக்கிரியை என்று சொல்வதேன்?**
அபரம் என்றால் பிந்தியது, உடலைவிட்டு உயர் போனபின் செய்யப்படுவதென்பது பொருள்

3. **அபரக்கிரியை உறுப்புக்கள் எவை?**
பிரேதக்கிரியை, சாம்பல்அள்ளுதல், அந்தியேட்டி, மாசியம், ஆண்டுத்திதி, திவசம் என்பனவாகும்

4. **மரணக்கிரியை செய்யத்தக்கவர் யார்?**
சைவக்குருக்கள், அவர் நல்லறவு, ஒழுக்கம், கிரியை விளக்கம், சிவபூசை, அக்கினி காரியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. **சாவது உடலா? உயிரா?**
சாவது உடல் தான். உயிர் அனாதியாக உள்ளபொருள். அது அழிவது இல்லை. பல பிறவிகளை எடுத்தெடுத்துச் செய்த வினைகள் எல்லாம் தீர்ந்த பின் சிவகதி சேர்ந்து இன்புற்றிருக்கும்.

6. **உயிர் வாழ்வில் மூன்று நிலைகள் இருப்பதாகச் செல்கிறார்களே?**
இம்மை - இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் நிலை
மறுமை - இவ்வுடல் இறந்த பின் வேறு உடல் எடுத்து வாழும் நிலை
அம்மை - வினைத்தொடர்புகள் எல்லாம் நீங்கிய பின் சிவகதியில் இன்புறும் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. உயிர் உடலை விட்டுப் பிரியும் போது எந்த உறுப்பால் வெளியேறும்?**

இந்த உடலுக்குக் கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குத்துவாரம் இரண்டு, வாய், மலசலவாசல், சலவாசல் ஆகிய ஒன்பது வாசல்கள் உள்ளது. இதில் ஏதாவதொரு வாயிலால் வெளியேறும். உயிர் வெளியேறும் போது அவதானித்தால் அந்த வாயிலில் அசைவு தெரியும்.

**8. உயிர் பிரியும் போது திருமுறைகள் பாடுவதேன்?**

உயிர் பிரியும் போது செய்யப்படுவது உக்கிராந்திக் கிரியை எனப்படும். உக்கிராந்தி என்றால் உயிர் கிளம்பிப் போதல் ஆகும். எல்லோருக்கும் விபூதிதாரணமும், சிவமூலமந்திர செபமும், திருமுறை பாராயணமும், விசேட தீட்சை பெற்றவர்களுக்குச் சிவபூசையும் செய்தல் வேண்டும். உயிர் சிவப்பேறு எய்துவதற்கு இது உபகாரமாகும்.

**9. இறந்த எல்லோருக்கும் இந்தக் கிரியைகள் பொருந்துமா?**

சமய தீட்சை பெற்றவர்க்கே இவை பொருந்தும், தீட்சை பெற்றவர்களே சைவசமயத்தாவார். இக்காலத்தில் தீட்சை பெறாதோருக்கும் சவத்தில் வைத்துச் தீட்சை வைத்து மேற்படி கிரியைகள் செய்யப்படுகின்றன. சாதாரணமானவருக்கு 31நாளில் அந்தியேட்டி செய்யப்படும் அதுவரை துடக்கு உண்டு. விசேட தீட்சை, சிவபூசை உடையவர்களுக்குச் சவத்தில் வைத்தே அந்தியேட்டி செய்யப்படும். அவர்களுக்குப் பதினாறு நாட்கள் தான் துடக்கு உண்டு.

**10. மரணம் நிகழ்ந்ததை ஆலயத்துக்கு ஏன் தெரியப்படுத்த வேண்டும்.?**

மரணம் நடந்த இடத்திலுள்ள ஆலயத்தில் பூசை நடவாதிருப்பதற்கும் வணக்கர் வந்து சாவீட்டுக் கருமங்களைக் கவனிப்பதற்குமாகும். ஊரில் பிரேதம் இருக்கும் வரை அயலவர் எல்லோருக்கும் துடக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. எந்த இடத்தில் வைத்துச் சவக்கிரியை செய்தல் வேண்டும்?**

வீட்டு முற்றத்தில் அல்லது மயானத்தில் பந்தலிட்டு அதில் வைத்துச் செய்தல் வேண்டும்.

**12. இறந்தவுடன் கை, கால் விரல்களைக் கட்டுவதேன்?**

உயிர் போய்ச் சிறிது நேரத்தில் உடல் விறைத்துவிடும் விறைக்குமுன் உடலை நேராக வளர்த்திக் கைவிரல்கள், கால் விரல்கள், வாய் என்பவற்றை நேராக்கிக் கட்டி விட்டால் உடல் ஒழுங்காக இருக்கும் என்பதற்காகவே சீலைத்துணியால் கட்டப்படும், கிரியையின் போது அவை அவிழ்க்கப்படும்.

**13. சவம் வைக்கப்படும் இடத்தின் மேல் வெள்ளை கட்டுவதேன்?**

இதுவரை உடலை ஆதாரமாகக் கொண்டிருந்த உயிர் உடலை விட்டு வெளியேறியதும் ஆதாரமின்றி அந்தரப்படும். உயிர் தங்குவதற்காகவே புதிய தூய்மையான வெள்ளை கட்டப்படும்.

**14. தலைமாட்டில் நெய்விளக்கு ஏற்றுவதேன்?**

உடலைவிட்டு வெளியேறிய உயிர் இருட்டில் அலையாமலும் அது செல்லும் வழிக்குத் தெய்வீக ஒளி உண்டாகவும், சிவசிந்தனையை அந்த இடத்தில் உண்டாக்குவதற்குமாகும்.

**15. இறந்த இடத்தில் முப்பத்தொரு நாளும் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைப்பதும் சில இடங்களில் உணவு படைப்பது ஏன்?**

உடலைப்பிரிந்து முப்பத்தொரு நாளும் அங்கு இருக்கும், அதன் பசி, தாகத்தைத் தீர்ப்பதற்காகவே இவை வைக்கப்படும்.

**16. மரண வீட்டில் பறை அடிப்பதேன்?**

மரணச் செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்காக, பேரீகைதாடனம் (பேரிகை - பறை, தாடனம் - அடித்தல்) என்று ஒரு கிரியையும் செய்வதுண்டு, கிரியை செய்யும் கரு இடத்தையும் பொருட்களையும் - சுத்தி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிகையில் மும்மூர்த்திகளையும் பூசித்து "எல்லா உலகுமுள்ள எல்லா உயிர்களும் நல்வாழ்வு வாழவும், கொடியோர் அடங்கவும் சகல செல்வங்களும் உண்டாகுக" என்ற பொருளுடைய மந்திரத்தைச் செல்லிப் பேரிகையை அடித்துக் கிரியைகளைச் செய்வோர். இது இப்பொழுது வழக்கத்தில் இல்லை.

**17. வீதியோரங்களில் வெள்ளைக் கொடி கட்டுவதேன்?**

துக்கத்தை வெளிக்காட்டுவதற்காக. சில இடங்களில் கறுப்புக் கொடி கட்டுவதும் உண்டு.

**18. மரணச் சடங்குகளில் தேவாரம், திருவாசகம் முதலிய திரு முறைகள் பாடக்கூடாதெனச் சிலர் கூறுகிறார்கள். இது சரியா?**

இது சில பிராமணர்களும், மூடர்களும் கூறும் தவறான கருத்து. மரணச்சடங்கில் சிவகும்பம் வைத்துச் சிவாக்கினி வளர்த்துச் சிவமந்திரம் சொல்லப்படுகிறதே. தமிழ் வேதமாகிய திருமுறைகள் பாடக்கூடாதென்பது எப்படிப் பொருந்தும். வடமொழி மந்திர நாதமும்தமிழ்மொழித் திருமுறைப் பண்களும் சூழலையும் மனங்களையும் தூய்மைப்படுத்துவதில் சமதையான தெய்வீகம் நிறைந்தவையே

**19. இறந்தவரின் உடலுக்கு அபிஷேகம்செய்வதேன்?**

சவத்தை தூய்மை செய்து சிவமாக்கும் பாவனை, மந்திர கிரியா பூர்வமாகச் சிவமாக்கப்பட்ட சிவகும்பத் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வதால் சவமும் சிவமாகுந் தன்மை பெறும், ஆன்மாவும் தூய்மை பெறும். கிரியையின் போது வளர்க்கப்பட்ட சிவாக்கினி கொண்ட கொள்ளி வைத்துத் தகனம் செய்வதும் சிவமாகுந் தன்மை உண்டாவதற்கே.

**20. மஞ்சள் கலந்த தண்ணீரால் நீராட்டுவது ஏன்?**

மஞ்சள் சிறந்த கிருமிநாசினி ஆதலால் சவத்தையும் சுற்றாடலையும் தூய்மை செய்வதுடன்? மங்கலமாகவும் இருக்கும் என்பதற்காகவே.

**21. சவத்துக்கு உறவினர் கால் கழுவுவதேன்?**

உரிமைக்காரர் இறந்தவருக்கு இறுதியாகச் செய்யும் மரியாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது. கிழக்கு மாகாணத்தில் இந்த நடைமுறை உண்டு. யாழ்ப்பாணத்தில் காலில் பூ வைத்து வணங்கும் வழக்கம் உண்டு.

**22. வாய்கரிசி போடுவதேன்? வீட்டிலா மயானத்திலா?**

செத்தவர் பசி தாகத்துடன் செல்லக் கூடாதென்பதற் காகவும் இதுவரை காலமும் உணவு தந்தவருக்கு வாய் நிறைய அரிசி போடும் பழக்கம் உண்டு.

**23. கொள்ளிக்குடம் எடுப்பது யார்?**

தந்தைக்கு மூத்த ஆண் பிள்ளையும், தாய்க்கு இளைய ஆண் பிள்ளையும் செய்வர். ஏனைய ஆண் பிள்ளைகளும் இதில் பங்கு கொள்வர். ஆண் பிள்ளை இல்லா விடத்துப் பெண்பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாவிடத்து மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும் செய்வார். இவர்கள் இல்லையெனில் உறவினர் செய்வர்.

**24. சவத்துக்குக் கூறைச்சேலை வேட்டி சால்வை போடுதல் ஏன்?**

செத்தவர் இறுதியாத்திரை செல்லும் போது, வாழ்வில் அவர் அணிந்த ஆடைகளில் மிக உயர்ந்தவற்றை அவருக்கு அணிந்து மங்கலமாக வழி அனுப்பும் மனத்திருப்திக்காகவும்.

**25. பிரேதம் எடுத்துச் செல்லும் போது தலையா காலா முன்பக்கம் இருக்க வேண்டும்.**

கால் பக்கம் தான் முன் செல்ல வேண்டும்.

**26. பிரேதத்தின் தலை தெற்குப் பக்கம் இருக்கக் கூடியதாக வைப்பதேன்?**

இறந்தவரின் உயிர் செல்லும் திசை தெற்கு (தென்புலம்) ஆதலால் தலை தெற்கே வைக்கப்படும்.

**27. சுடலையில் பிரேதத்தை எத்தனை முறை, எந்தப் பக்கமாகச் சுற்றி வர வேண்டும்?**

மூன்று முறை இடப்பக்கமாகச் சுற்றி வந்து தலைப்பக்கம் தெற்கே இருக்கக் கூடியதாக வைக்க வேண்டும்.

அபரக்கிரியையில் எல்லாம் இடமாகவே நடைபெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. ஏன் இடப்பக்கமாகச் சுற்ற வேண்டும்?**

அபரக்கிரியை எல்லாம் வலம்மாறியே நடைபெறும். (பூர்வக்கிரியையில் வலமாகவும் அபரக்கிரியையில் இடமாகவும் நடக்கும்)

**29. ஏன் எல்லாக் கருமமும் மூன்றுமுறை செய்யப் படுகிறது?**

இந்தப் பிரபஞ்சத்தில் உண்மைப் பொருள்கள் பதி, பசு, பாசம் என மூன்று. ஆதலால் செய்யும் கருமங்கள் சரியாக நிறைவேறுவதற்கு மூன்றுமுறை செய்யப்படும். மூன்று முறையில் தான் யாவும் பூரணமாவது இயற்கை நியதி.

**30. பிரேதம் கொண்டு போகும் போது அரிசி. தேங்காய்த் துண்டுகள், மஞ்சள் கலவை அல்லது நெற்பொரி எறிந்து கொண்டு போவதேன்?**

பிரேதம் போகும் வழியில் எதிர்ப்படும் பேய்,பிசாசு, மற்றும் துர்த்தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவாம்.

**31. சுடலையில் சவத்திலுள்ள நகைகள் அரைஞாண் கயிறு என்பவற்றைக் கழற்றுவதேன்?**

இவற்றை எரியவிடுவதால் அல்லது மண்ணுள் மூடுவதால் எவ்வித பயனுமின்றி வீணாகிவிடும் என்பதால் அவற்றை எடுத்து இறந்தவர் பெயரில் தானதர்மம் செய்வர்.

**32. பிரேதமேடை அமைத்து மூன்று பக்கம் குச்சு [உதைகட்டை] நடுவதேன்?**

எரியும் போது விறகு பொறிந்து விழாமல் இருப்பதற்காக.

**33. உடல் எரிக்கும் போது நெஞ்சாங்கட்டை வைப்பதேன்?**

உடல் எரியும் போது தசையும் கொழுப்பும் உருகி எரிய எலும்புகூடு மேலெழுந்து விடாமல் அமர்ந்து எரிவதற்காக.

**34. யார் நெஞ்சாங்கட்டை வைக்க வேண்டும்?**

இது இடத்துக்கிடம் வேறுபடும். மச்சான், மாமன், அல்லது மருமகன் வைப்பது பொதுவான வழக்கம்.

**35. கொள்ளி வைத்தவர் அடியழித்துக் கற்பூரம் கொளுத்திக் கும்பிடுவதேன்?**

இறந்தவர் சிவகதி சேர வேண்டும். என்று வணங்குதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36. கடலையாற்றுதல் என்றால் என்ன? எப்படிச் செய்ய வேண்டும்?**

இதனைக் காடாற்றுதல், சம்பல் அள்ளுதல், அஸ்தி சத்சயனம் என்றும் சொல்வர் எரித்த மூன்றாம் நாள் எரித்த இடத்தின் சூடு ஆறக்கூடியதாத் தண்ணீர் ஊற்றிக் குளிரச் செய்து, நீறுபூத்திருக்கும் என்பு சாம்பலுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டே சாம்பல் அள்ளுதல் வேண்டும். ஒரு புதுப்பாத்திரத்தில் பால் விட்டு அதற்குள் கால், தொப்புழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய பகுதிகளிலிருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்துப் போட்டு வெள்ளைத் துணியால் மூடிக் கொண்டு போய் ஆழமான (ஆறு, கடல், குளம்) தீர்த்தத்தில் இட வேண்டும்.

**37. எரிந்த சாம்பலை ஏன் புண்ணிய தீர்த்தத்தில் போட வேண்டும்?**

நாம் உயிருடன் இருக்கும் போது புண்ணிய தீர்த்தத்தில் நீராடினால் எங்கள் உடல் குற்றமும் உயிர்க் குற்றமும் நீங்குவது போல இறந்த பின் சாம்பலை அங்கு கரைப்பதால் இறுதியாக அவரிடமிருந்த குற்றங்கள் நீங்கும் என்பதற்காக.

**38. எரிந்த சாம்பலை வீட்டில் வைத்திருக்கலாமா?**

இல்லை, அது தீய சக்திகளுக்கு இடமாகிவிடும். தூரதேச புண்ணிய தீர்த்தங்களுக்குக் கொண்டு போகத் தேவையானால் எங்காவது பாதுகாப்பான இடத்தில் மண்ணில் தாழ்த்தி அல்லது மரத்தில் வைத்திருக்கலாம்.

**39. மரண வீட்டில் எட்டு நாட்களுக்குச் சமைக்கக் கூடாது என்ற விதிமுறை உண்டா?**

அப்படி ஒரு விதி இல்லை. இறந்தவர் சார்பில் ஏற்பட்ட துக்கம் காரணமாக வீட்டில் சமைக்கக் கூடிய நிலைமை இருக்காது. உறவினர் நண்பர்களே உணவு கொடுப்பர் சில இடங்களில் அந்தியேட்டி வரை இந்த நிலை நீடிக்கும்.

**40.எட்டுச் செலவு என்பதென்ன?**

இது பத்ததிகளிலோ கிரியை முறைகளிலே இல்லாத ஒன்று, ஆனால் நடைமுறையில் உள்ளது. இறந்த எட்டாம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு விருப்பமான உண்பன, தின்பன, பருகுவன முதலான உணவுகளைத் தேடிப் படைத்துக் கும்பிட்டு இதில் ஒரு பகுதியை எடுத்துப்போய் முச்சந்தியிலே பேய், பிசாசு, இராட்சதர்களுக்காக் கழித்து விடப்படும். இது இரவில் தான் நடைபெறும்.

**41. அந்தியேட்டி 31ஆம் நாள் செய்வதேன்?**

உடலைவிட்டுப் பிரிந்து உயிர் 31 நாட்கள் அந்த இடத்தில் நிற்கும் என்பது சாத்திர உண்மை. 31 ஆம் நாள் கிரியையுடன் அது செல்ல வேண்டிய கதிக்குச் செல்லும். ஆதலால் இறுதியில் செய்யப்படுவதாகிய கருமம் இது ஆகும். (அந்திய - இறுதி இட்டி - கிரியை)

**42. அந்தியேட்டியில் செய்யப்படும் கருமங்கள் எவை?**

இறந்த 31ஆம் நாள் புண்ணிய தீர்த்தக் கரையில் பந்தலிட்டு அல்லது அங்குள்ள மண்டபத்தில் செத்தவரின் சரீரத்துக்குப் பதிலாகத் தருப்பையில் "பத்தலிகை" எனும் பிரதி பிரேதம் அமைத்து இறந்த சவத்தில் செய்தது போல மரணக்கிரியைகளான பிரேதத்தின் தகனம், காடாற்றுதல் முதலான கருமங்கள் எல்லாம் நடைபெறும்.

**43. அந்தியேட்டியில் தொடர்ந்து செய்யப்படும் தத்துவபூசை என்பதென்ன?**

மண்டபத்தில் தென்கீழ்த்திசையில் 25 சதுர தண்டில் மிட்டு பஞ்சபூதங்களையும் அவற்றைச் சார்ந்த கலைகள் அதிதெய்வங்களையும் குறிக்கும் ஐந்து நிறப் பொடிகளைப் பரப்பி (பிருதுவி- மஞ்சள், அப்பு - பச்சை, தேயு - சிவப்பு, வாயு - கறுப்பு, ஆகாயம் - வெள்ளை பூசிப்பதாகும். இதனால் இறந்தவருக்கிருந்த பஞ்சபூதத் தொடர்புகள் நீக்கப்படுகிறது. என்பது பொருள்.

**44. அந்தியேட்டியைப் பிராமணர்கள் செய்யலாமா?**

இல்லை. சவக்கிரியை செய்த சைவக்குருக்களே செய்தல் வேண்டும். தீட்சை, திருமணக்கிரியை சவக்கிரியை, அந்தியேட்டி ஆகியவற்றைச் செய்வது சைவக்குருமார் என்பதுதான் தமிழர் வழமை ஆரியர்கள் என்று தம்மைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொள்ளும் பிராமணர் கோயிற்கிரியைக்கே உரியவர். இப்பொழுது சில பிராமணர்கள் செய்தாலும் பொதுவாகப் பிராமணர் செய்வதில்லை.

**45.சுண்ணமிடித்தல் என்றால் என்ன?**

இது சுர்ணோற்சவம் என்று சொல்லப்படும். இறந்தவரின் உடலை அபிஷேகம் செய்து தூய்மையாக்கி, நல்ல ஆடை அணிவித்துக் கொண்டு வந்து பந்தலின் மேற்கருகில் வைத்த உரலில் மஞ்சளும் அறுகும் இட்டுத் திருப்பொற்சுண்ணம் பாடிக் கொள்ளிகாரகர் இடித்தல் வேண்டும்.

**46.கோயிலில் சுவாமிக்குச் சூர்ணோற்சவம் செய்யப்படுகிறதே சவத்துக்குச் செய்யலாமா?**

ஆம், இறந்தவர்குச் சிவமாந் தன்மையை உண்டாக்கிச் சிவகதி சேர்க்கும் நற்கருமமே இது இருப்போருக்கும் தெய்வீகச் சூழலை ஏற்படுத்தி மனநிறைவைத் தருவதால் இது செய்யப்படுகிறது.

**47. வீட்டுக்கிரியை எனப்படுவன எவை?**

தீர்த்தக்கரையிலே அந்தியேட்டி முடித்து வீட்டில் வந்து செய்யப்படும் கிரியைகளாகும். நக்னதானம் சபிண்டீகரணம் வரையுள்ளவை.

**48. சபிண்டிகரணம் என்றால் என்ன? வீட்டுக் கிரியையைச் சபிண்டீகரணம் என்றும் சொல்வதேன்?**

உயிரைப் பிதிர்களுடன் சேர்த்தல் என்பது பொருள் அரிசி மா, தேன், தயிர், எள்ளு, கதலிப்பழம் என்பவற்றை நன்கு பிசைந்து நான்கு உருண்டைகளாக்கி வாழையிலையில் நன்கு பிசைந்து நான்கு உருண்டைகளாக்கி வாழையிலையில் தர்ப்பை வைத்து அதன்மேல் பிதிர்வர்க்கத்துக்கு மூன்று மாதருவர்க்கத்துக்க மூன்று பிண்டங்களை வைத்து அவற்றின் கிழக்கே இறந்தவரைக் குறித்து ஒரு பிண்டம் வைத்து உரிய பூசை வழிபாடுகள் செய்ய எள்ளுந் தண்ணீரும் இறைத்து இறந்தவரின் பிண்டம் பிதிர்களின் பிண்டங்களுடன் சேர்க்கப்படம். இது இறந்தவரின் உயிரைப்பிதிரர்களுடன் சேர்த்துவிடும் கருமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**49. ஏகோதிட்டம் என்று ஒறு கிரியை செய்யப்படுகிறதே அது ஏன்?**

இறந்தவரின் உயிர் மறு உலகு செல்லும் வழியில் பசி தாகம் மற்றும் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு ஒருவருட கால வாழ்வுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும், ஒரு புரோகிதரில் இறந்தவரின் உயிரை ஆவாகனம் பண்ணிக் கொடுத்தலாகும். இந்தப் புரோகிதர் ஒரு வருடம் அல்லது ஆறு மாதத்திற்குத் தீர்த்த யாத்திரை போக வேண்டும்.

**50. இப்பொருட்கள் அந்த ஆன்மாவுக்கு உதவுமென்பதை நம்பலாமா?**

ஒரு இடத்தில் நடக்கும் காட்சியை விஞ்ஞான ஒலி, ஒளி அலைகளாக மாற்றி படமாக்கிப் பல ஆயிரம் கிலோமீற்றகருக்கப்பால் தொலைக்காட்சியின் திரையில் காட்டுகிறதே. இதை நம்புகிறோமல்லவா. மெஞ்ஞானத்தில் அருவமான உயிருக்கு இப்பொருட்கள் எல்லாம் அருவமாகி உதவும் என்பதை ஏன் நம்பமுடியாது விஞ்ஞானத்தில் அதற்குரிய சாதனங்கள் கருவிக் பயன்படுவது போல மெஞ்ஞானத்தில் மந்திர சக்தி பயன்படுகிறது எனக் கருதலாம்.

**51. இறந்தவருக்ச் செய்யப்படும் தான தர்மங்கள் எப்படி அவரின் உயிருக்கு போய்ச் சேரும்?**

இதுவும் முன் சொன்னது போன்றது தான். இவ்வுலகில் வாழும் போது தேவர்கள் நமது சேம நலன்களுக்கு உதவுவது போல மரணத்தின் பின் பிதிர்கள் என்போர் உதவுவர். பூர்வக் கிரியையில் தேவர்க்குப்பிரீதியாயும் அபரக்கிரியையில் பிதிரர்க்குப் பிரீதியாயும் பூசை வழிபாடு செய்வது இதனை உறுதிப்படுத்தும்.

**52. பிதிர்க்கடன் செய்வதேன்?**

இது சிரத்தையோடு செய்யப்படுவதால் சிரார்த்தம் எனப்படும். இறந்தவரின் ஆத்மா எந்த நிலையில் எங்கிருந்தாலும் அவர் பெயரில் செய்யப்படும் சிராத்தங்கள், தான தர்மங்களின் பயனை பிதிரர்கள் அவருக்கே சேர்ப்பிப்பர். அதனால் அவர் சாந்தியும், ஆன்ம ஈடேற்றமும் அடைவர். செய்யவருக்கு ஆசியும் வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**53. பஞ்சமி என்றால் என்ன? பஞ்சமியில் ஒருவர் இறந்தால் என்ன செய்ய வேண்டும்?**

அவிட்டம், சயம், புரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சததிரங்களில் ஒன்றில் இறந்தால் அவிட்ட பஞ்சமி என்பார்கள். இது பஞ்சமித்திதி என்பதல்ல. உண்மையில் தனிஷிடா பஞ்சமி என்பதே சா. அவிட்ட பஞ்சமிக்கென்று சாந்திக் கிரியையுண்டு. அதனை அந்தியேட்டிக் கிரியையின் பின் செய்ய வேண்டும். இல்லையேல் தொடர்புள்ள வேறு பலருக்கு மரணம் நேரும் என்பது நம்பிக்கை, சாந்தி செய்யாமல் கோழிக்குஞ்சோ, முட்டையோ, கமுகம் பிள்ளையோ பெட்டிக்குள் வைத்துவிடுவது புத்தி பூர்வமானதல்ல. ஒரு உயிருக்காக வேற உயிர்களை வதைப்பது சைவத்துக்குப் பொருந்தாது.

**54. ஆடி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் பிதிர்க்கடன் செய்வதேன்?**

இந்த மாதங்கள் பிதிர்கள் பூமியை நோக்கி வந்து தான தர்மங்களை கற்கும் காலம் என் ஞானியர்கள் சொல்லி வைத்துள்ளார்கள். ஆதலால் அக்காலங்கள் பிதிர்க்கடன் செய்ய உகந்தவை. ஆடி அமாவாசையும், புரட்டாதி மஹாளய பட்ஷமும் இதற்கு விசேட காலங்களாகும்.

**55. அகால மரணமடைந்தவரின் கிரியைகள் எப்படிச் செய்யப்பட வேண்டும்?**

தானாகத் தன் உயிரைப் போக்கிக் கொண்டவர்களுக்கும், விபத்தில் உடல் சிதைந்தவர்களுக்கும் சவக்கிரியை செய்வதில்லை. ஆறு மாதத்தின் பின் தர்ப்பையில் அவ்வுயிரை வருவித்துச் சவக்கிரியையும் அந்தியேட்டியும் ஒன்றாகச் செய்யப்படும்.

**56. தாய் தந்தையருக்கு எவ்வெக் காலங்களில் விரதமிருந்து பிதிர்கடன், தானதர்மங்கள், வழிபாடுகள் செய்யத்தகும்?**

பொதுவாகச் சிராத்தம் செய்யும் திதியிலும், தாய்க்குப் பூரணை காலங்களிலும், தந்தையருக்கு அமாவாசைக் காலங்களிலும் செய்வது தகும். தந்தையாம் தன்மையுமைய சூரியனின் கிரணங்கள் (கதிர்கள்) அமாவாசை காலத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாந்தன்மையுமைய சந்திரனின் கிரணங்கள் பூரணையிலும் பூமியில் தாக்கத்தை உண்டாக்குவதால் பிதிர்கள் பூமியை நோக்கி வரும் காலமாகும். ஆதலால் தந்தைக்கு அமாவாசையும்,தாய்க்குப் பூரணையிலும் உகந்தவையாகும்.

**57.கிடங்கு வெட்டுவதற்கு மூவர் மட்டும் செல்வதேன்?**

கிடங்கு வெட்டுவதற்கு மண்வெட்டி, அலவாங்கு, கோடரி ஆகிய மூன்று கருவிகள் தேவைப்படும். ஒவ்வொருவர் ஒவ்வொன்றுடன் போவதால் மூவர் செல்ல வேண்டும் எனும் வழக்கம் வந்திருக்கலாம்.

**58. கிடங்கில் மூன்று பிடி மண் போடுவதேன்?**

உரிமைக்காரர் பிரேதத்தின் தலை நெஞ்சு, கால் ஆகிய மூன்று இடங்களில் போட வேண்டும். ஆதலால் மூன்று பிடி மண் ஆயிற்று எனக் கொள்ளலாம்.


**59. துடக்கு என்றால் என்ன?**

துடக்கு என்றால் இறப்பு, பிறப்பு ருதுவாதல் காரணமாக நிகழும் அசுகுசுப்பான தூய்மையின்மை அகப்புறச் சூழ்நிலையைக் குறிக்கும். சம்பந்தப்பட்டவரின் உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் தொடர்பான திரவங்கள், கிருமிகள் முதலியவற்றால் உண்டாவதாகும்.

இறப்புக்காரணமாகத் தொடர்புடையவர்களுக்கு உண்டாகும் மனத்தகில், அதிர்ச்சி, அமைதியின்மை கவலைகள் மிகுந்த சூழ்நிலை துடக்கு எனப்படும். இரத்தத்துக்குள்ளாவதை எமது அனுபவத்தில் காணலாம்.

**60.ஆலயங்கள் விழாக்களுக்கு மரணமானவரின் உறவினர் செல்லலாமா?**

இல்லை, துடக்கு உரியவர்கள் துடக்கு கழிக்கும் வரை கோயிலுக்குப் போகக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்.

## உயர்திரு பொன்னையா. சுந்தரலிங்கம் அவர்கள்

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கு நல்வழி காட்டி, வாழவைத்த எம் அன்பு தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும்,பதாதைகள் , மலர்வளையம் ,அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தந்தியில் அனுதாபம் தந்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டும் எமக்கு ஆறுதல் கூறிய உற்றார்,உறவினர்,நண்பர்கள் மற்றும் அனைத்து நெஞ்சங்களிற்கும் எம் இதயம் கனிந்த என்றும் மறவா நன்றியை நவில்கின்றோம்.

- குடும்பத்தினர் -

17ம்,கட்டை வள்ளிபுனம்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.

## உயர்திரு பொன்னையா. சுந்தரலிங்கம்அவர்களின் சந்ததி

**பொன்னையா + கனகம்மா**

- புவனேஸ்வரி
- மகாலிங்கம்
- பிருந்தாமணி
- ஆனந்தராசா
- சுந்தரலிங்கம்
- செல்வநாச்சியார்
- பவானி
- அமரர் குணலிங்கம்
- அமரர் உருத்திரநாதன்
- தயாநந்தி

**இரத்தினம் + தெய்வானை**

- யசோதை
- உலகநாதன்
- சிதம்பரநாதன் (டென்மார்க்)
- சூரியகுமார் (ஜேர்மனி)
- பகிரதாதேவி
- சாந்தகுமாரி
- சந்திர கௌரீசன் (கனடா)
- ரவிச்சந்திரன்
- கேதீஸ்வரன்
- சுதர்ஸன்

**சுந்தரலிங்கம் + யசோதை**

- மதுரா + சஜிந்தன் → ருதிந்தன்
- கிஷாந்தி + சிவநாதன்
- சாரங்கா (பிரான்ஸ்) + அகிலன் (பிரான்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org